# வலயக்கல்வி அலுவலகம் - துணுக்காய்
# முதலாம் தவணைப் பரீட்சை - 2020

**பாடம்:- புவியியல்**

சுட்டெண்:....................... **தரம் - 07** **நேரம் : 02 மணி**

## பகுதி - I

**01. மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. உயிரினங்கள் வாழ்வதற்குச் சாதகமான சூழலைக் கொண்ட ஒரே ஒரு கோள்
    1. புதன் 2. வெள்ளி 3. பவி 4. செவ்வாய்

02. உலகின் மிகப்பெரிய கண்டமாக அமைவது எது
    1. ஆசியா 2. ஆபிரிக்கா 3. அவுஸ்திரேலியா 4. ஐரோப்பா

03. புவிச் சுழற்சிக்கு எடுக்கும் காலம்
    1. 24 மணித்தியாலயம் 2. ஒரு வருடம் 3. 365 நாள் 4. 366 நாள்

04. புவியை வடஅரைக்கோளம், தென்னரைக் கோளம் என வேறுபடுத்துவது
    1. கடகக் கோடு 2. மகரக் கோடு
    3. கிறீன்வீச் கோடு 4. மத்திய கோடு

05. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவு அல்லாதது
    1. இலங்கை 2. கிறீன்லாந்து 3. மாலை தீவு 4. அந்தமான தீவு

06. புவிமேற்பரப்பில் நீரினால் சூழப்பட்ட பகுதியின் சதவீதம்
    1. 71% 2. 29% 3. 78 % 4. 21%

07. நீரினால் சூழப்பட்ட சிறிய நிலப்பகுதி
    1. கண்டம் 2. தீவு 3. சமுத்திரம் 4. கடல்

08. மத்திய மலை நாட்டிற்குரிய தரைதோற்றப் பண்பு
    1. எச்சக்குன்றுகள் 2. குடா 3.முனைகள் 4. மலைத்தொடர்கள்

09. இலங்கையை இந்தியாவில் இருந்து பிரிக்கும் நீரிணை எது?
    1. பெரிங் நீரிணை 2. மகலன் நீரிணை 3. பாக்கு நீரிணை 4. சுயஸ்கால்வாய்

10. கிறீன் விச் நகரம் அமைந்துள்ள நாடு
    1. ஜப்பான் 2. பிரித்தானியா 3. இந்தியா 4. சீனா

**02. பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.**

11. புவி ............................ வடிவமுடையது.

12. கொழும்பில் இருந்து சங்கமான் கந்தை கந்தை முனை வரையான இலங்கையின் அகலம் ................ ஆகும்.

13. சர்வதேச சமுத்திர சட்டத்திற்கு அமைவாக இலங்கையின் ஆள்புல கடல் எல்லை ............... ஆகும்.

14. இலங்கை ...................... வலயத்தில் அமைந்துள்ள நாடாகும்.

15. புவியின் மொத்த மேற்பரப்பளவு ....................... மில்லியன் சதுர கிலோமீற்றர் ஆகும்.

(அயன, 224Km, கோள, 12 கடல்மைல், 432Km, 510)

**03. சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) அடையாளமிடுக.**

16. இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு வடகீழ் பருவக்காற்று மூலம் அதிக மழை கிடைக்கிறது. ( )
17. இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவு ஆகும். ( )
18. உள்ளகச் சமவெளியில் நீர்வீழ்ச்சிகள், கணவாய்கள் அமைந்துள்ளன. ( )
19. அவுஸ்திரேலியா கண்டமானது தனிநாடாக உள்ளது. ( )
20. இலங்கையில் உள்ள உயரமான மலையாக பீதுரு தாலகால மலை காணப்படுகிறது. ( )

(20x 2= 40 புள்ளிகள்)

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**01.**

1. முதலாம் தவணைக்காக உமக்கு வழங்கப்பட்ட கணிப்பீடு என்ன?
2. இக் கணிப்பீட்டை மேற்கொண்ட பாட அலகு யாது?
3. கணிப்பீட்டுக்காக நீர் பயன்படுத்திய தர உள்ளீட்டுப்பொருட்கள் எவை?
4. இக் கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் 02 தருக.

**02.**

1. உலகப்படத்தில் காட்டப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை உரிய இடத்திற்கு எதிரே அடைப்புக் குறிக்குள் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1 வட அமேரிக்கா | ( ) | 7. ஆசியா | ( ) |
| 2. பசுபிக் சமுத்திரம் | ( ) | 8. அவுஸ்திரேலியா | ( ) |
| 3. கிறீன்லாந்து | ( ) | 9. இந்தியா | ( ) |
| 4. ஆபிரிக்கா | ( ) | 10. செங்கடல் | ( ) |
| 5. இலங்கை | ( ) | 11. பாக்கு நீரினை | ( ) |
| 6. மடகஸ்கார் | ( ) | 12. இந்து சமுத்திரம் | ( ) |

**03.**

1. புவிச் சுற்றுகை என்றால் என்ன?
2. புவியின் மத்திய கோட்டு விட்டம் எவ்வளவு?
3. சமுத்திரங்கள் என்றால் என்ன?
4. உலகில் உள்ள சமுத்திரங்களை பெயரிடுக.
    1.
    2.
    3.
    4.
    5.

**04.**

1. தரப்பட்டுள்ள பூகோள மாதிரிப்படத்தில் ABCED அகலக் கோடுகளைப் பெயரிடுக.




A -
B -
C -
D -
E -

2. நெடுங்கோடுகள் என்றால் என்ன?
3. $180^0$ நெடுங்கோடு எப்பெயரால் அழைக்கப்படும்
4. இலங்கையின் அகல நெடுங்கோட்டு அமைவிடத்தை தருக.

**05.**

1. இலங்கையின் பிரதான மூன்று தரைத்தோற்ற வலயங்களையும் பெயரிடுக.
2. கரையோர சமவெளிக்குரிய தரைத்தோற்ற அம்சங்கள் எவை?
3. இலங்கைக்கு கிடைக்கும் மூன்று வகையான மழை வீழ்ச்சிகளும் எவை?
4. வடகீழ் பருவக்காற்று மழை கிடைக்கும் காலப்பகுதி யாது?

(12x5= 60 புள்ளிகள்)


I
G
H
J
B
K
A
L
F
E
C
D
H